# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
## பாதுகாப்பு அமைச்சு
# பதவி வெற்றிடங்கள்

## தணிப்பு நடவடிக்கைகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம் (RLVMMP) ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் நிதியிடப்பட்டது

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் நிதியிடப்பட்டதும் தணிப்பு நடவடிக்கைகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனைக்காக பின்வரும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இந்த செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவராண்மையானது பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமாகும். இந்த செயற்றிட்டத்தின் கீழ் பதுளை, கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 126 அமைவிடங்களில் மற்றும் புகையிரத வழித்தடமுடன் அமைந்துள்ள உறுதியற்ற அமைவிடங்களில் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் பணிகள் மேம்படுத்தப்படும். I ஆம் கட்டத்தின் கீழ் முக்கியமான 24 தளங்கள் மண்சரிவிலிருந்து குறைக்கப்படும்/சீரமைக்கப்படுமென்பதுடன் மீதியான தளங்கள் II ஆம் கட்டத்தின் கீழ் மண்சரிவிலிருந்து குறைக்கப்படும்/சீரமைக்கப்படும்.

### 1. கொள்வனவு விஷேடத்துநர் (01 பதவி - பீஎஸ்8 மட்டம்)

**பதவியின் சுருக்கம்**

செயற்றிட்டத்தின் முழுவதுமான கொள்வனவு செயற்பாடுகள் மற்றும் ஒப்பந்த நிருவாகத்தை முகாமைப்படுத்துவதற்கு அவர் (ஆண்/பெண்) பொறுப்பாகவிருப்பார்.

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளமாணி பட்டப்படிப்பு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பட்டப்படிப்பிற்கு நிகரானதொரு தகைமை அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/நிகரான தொழில்சார் தகைமையொன்றுடன் முகாமைத்துவரீதியிலான மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்

**அல்லது**

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளமாணி பட்டப்படிப்பு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பட்டப்படிப்பிற்கு நிகரானதொரு தகைமை அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/நிகரான தொழில்சார் தகைமையொன்றுடன்

சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்ற கூட்டுநர்/பட்டயம் பெற்ற அங்கத்துவம் அத்துடன் முகாமைத்துவரீதியிலான மட்டத்தில் ஆகக் குறைந்தது 09 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**அல்லது**

இ) நாடளாவிய அரசாங்க சேவையில் I ஆம் தர அலுவலர் அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் நிகரான பதவிநிலை

**அத்துடன்**

I ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்.

**வயது :** 2022.11.15 ஆம் திகதியன்று 64 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

நியமனங்கள் ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அமைந்திருப்பதுடன் திருப்திகரமான செயற்பாட்டில் வருடந்தோறும் புதுப்பிக்கப்படுவதற்கு உட்பட்டதாகவிருக்கும். அரச சேவை/ நியதிச்சட்ட சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளுடாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கப்படுவாரா இல்லையா என்பதை அவர் குறிப்பிடல் வேண்டும்.

மாதாந்த சம்பளத்தின் 10% ஆனது ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பாகவிருக்கும் என்பதுடன் தொழில் வழங்குநரின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பானது 12% ஆகவும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பானது 3% ஆகவுமாகவிருக்கும்.

**சம்பளம்:**

01/2019 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் ஏனைய உரித்தான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகவிருக்கும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**

இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து 10 நாட்களுள் முழுமையான சுயதரவு மற்றும் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்கள் அத்துடன் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடன் தயவு செய்து விண்ணப்பிக்கவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியாதை குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்கள் பின்வரும் முகவரியை அடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். (உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத, தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் இல்லாதவைகள் மற்றும் சான்று பகரும் சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்று நிராகரிக்கப்படும்:)

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**தணிப்பு நடவடிக்கைகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05.**
**(தொலைபேசி: 0112559869)**